**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பு - 2021 செப்தெம்பர் 27 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரை**

---

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பின் 2021 செப்தெம்பர் 27 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான முதலாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 24 ஆம் திகதிய பிஏடி 4691 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 40 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளன. கொவிட்-19 தடுப்பூசிகளுக்கான மலிவு மற்றும் சமமான அணுகலை விரைவுபடுத்துதல் மற்றும் தடுப்பூசி முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பயனுள்ள தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த உதவுதல் மற்றும் பெற்றோர் செயற்திட்டத்தின் கீழ் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துதல் என்பன இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,000 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் 27 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1∴2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழு ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடும். எனினும், மீளாய்வு காலப்பகுதியின் போது அது நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது செயற்திட்ட வழிகாட்டல் குழுவை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் மற்றும் 2022 சனவரி மாதங்களில் ரூபா 16,102 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 14 மில்லியன் டோஸ் பைசர் தடுப்பூசி பெறப்பட்ட பின்னர் 2022 ஆகஸ்ட் 22 வரை 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் விலைப்பட்டியல்களின் அசல் பிரதிகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மருத்துவ வழங்கல் பிரிவின் கணனி முறைமையில் தடுப்பூசி இருப்புக்களின் பெறுவனவு மற்றும் வழங்கலை உள்ளிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | • விலைப்பட்டியல்களின் அசல் பிரதிகளை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்<br>• மருத்துவ வழங்கல் பிரிவின் கணனி முறைமையில் தடுப்பூசி இருப்புக்களின் பெறுவனவு மற்றும் வழங்கலை உள்ளிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 யூலை 31 இல் உள்ளவாறு தடுப்பூசிகளுக்காக சுகாதார நிறுவனங்களுக்கு ரூபா 6,956 மில்லியன் மொத்த கிரயத்தில் 6 மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. தடுப்பூசிகள் 30 நாட்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், மீதமுள்ள இருப்பு மீதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பயன்படுத்தப்பட்ட அளவு அல்லது பயன்படுத்தாமல் இருந்த அளவு பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

பிரகாரம் 30 நாட்களுக்கு மேலாகியதால் 147 சுகாதார நிறுவனங்களால் ரூபா 31 மில்லியன் பெறுமதியான 23,159 டோஸ் தடுப்பூசிகள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

(இ) தடுப்பூசிக்காக சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்படாத ரூபா 10,737 மில்லியன் (மொத்தமாக கொள்வனவு செய்த கையிருப்பில் 57 சதவீதம்) பெறுமதியான 8 மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் 2022 யூலை 31 இல் காலாவதியாவதன் காரணமாக தேசிய இரத்த மாற்ற நிலையம் மற்றும் தொற்றுநோயியல் பிரிவில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. பின்னர், எதிர்மறை 60 முதல் எதிர்மறை 90 வரையான செல்சியஸ் வெப்பநிலையில் திறக்கப்படாத தடுப்பூசிகளின் ஆயுட்காலத்தை 09 மாதங்களில் இருந்து 12 மாதங்கள் வரை அதிகரிப்பதற்கு உலக சுகாதார நிறுவனம் 2022 மே 13 இல் பரிந்துரையை அவசரகால பயன்பாட்டு செயன்முறைக்காக வழங்கியிருந்தது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் 7 மில்லியன் தடுப்பூசி டோஸ்களை 12 மாதங்கள் வரை நீடித்துள்ளது. எனினும் வாழ்க்கை காலம் நீடிக்கப்பட்ட 316,926 தடுப்பூசி டோஸ்கள் 2022 செப்தெம்பர் 05 வரை தடுப்பூசிக்காக விடுவிக்கப்பட்டுள்ளன.

- ºகணைநச டீழைவேநுஉா நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரம் தடுப்பூசிகள் மிகக் குறைந்த வெப்பநிலையில் (ருடுவு) எதிர்மறை 60 முதல் 90 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.
- தடுப்பூசிகள் 2-8 ºஊ வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தால் ருடுவு இலிருந்து அகற்றப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் வரை மாத்திரமே தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- இந்த 30 நாட்களுக்குள் பயன்படுத்தப்படாத தடுப்பூசிகளை மீண்டும் பயன்படுத்த முடியாது, மேலும் 30 நாட்களுக்குப் பிறகு நிராகரிக்கப்பட வேண்டும்.
- - 90 ºஊ முதல் 60 ºஊ வரையிலான வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட தடுப்பூசிகளின் திறக்கப்படாத குப்பிகளின் அடுக்கு ஆயுளை நீடிப்பதற்கான உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் உற்பத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை மதிப்பாய்வு செய்த பின்னரும், ஆேசுயு தடுப்பூசியின் நான்கு தொகுதிகளின் அடுக்கு ஆயுளை 2022 ஒக்தோபர் 31 வரை நீடிப்பதற்கு

அறிவுறுத்தலின் பிரகாரம் தடுப்பூசிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பரிந்துரைகளை வழங்கியுள்ளது.<br>• தடுப்பூசியின் ஒரு தொகுதிக்கு அடுக்கு ஆயுளை நீடிப்பதற்கான அங்கீகாரம் இன்னும் வழங்கப்படவில்லை. சுகாதார அமைச்சின் விசாரணையில், இந்த குறிப்பிட்ட தொகுதியின் அடுக்கு ஆயுளை நீடிப்பதற்கு தேவையான தகவல்கள் வழங்குநர்களால் இன்னும் வழங்கப்படவில்லை என்று ஆேசுயு தெரிவித்துள்ளது. | |
| (ஈ) | செயற்திட்டத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 செப்தெம்பர் 27 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 யூன் 17 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சரியான நேரத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |